6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

17. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு புயல்பாதிப்பு கட்டிடங்கள் கட்டுமான தனி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2–1–1987 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

18. 1940 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 2–12–1986 ஆம் நாளிட்ட 3323 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

19. முந்தைய உணவு மற்றும் வேளாண்மைத் துறையினரால் வெளியிடப்பட்ட 10–12–1963 ஆம் நாளிட்ட II-1, 62/1964 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 16–3–1987 ஆம் நாளிட்ட 331 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

20. தஞ்சையைச் சார்ந்த திருவாரூர் மற்றும் பூதலூர் அங்காடி குழுக்களின் முகவரிகளை பரிமாற்றிக் கொள்வது குறித்து வேளாண்மைத் துறையின் 29–9–1987 ஆம் நாளிட்ட 1885 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

21. திருநெல்வேலி, திருவேங்கடம் அங்காடிக்கு அங்காடிகள் பகுதியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 29–9–1987 ஆம் நாளிட்ட 1886 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

22. அரூர் அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது மற்றும் பாப்பிரெட்டி அங்காடிப் பகுதியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 21–12–1987 ஆம் நாளிட்ட 2311 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற் றது].

23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான ஐந் தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

43. 1988–89 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).

44. 1988–89 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

45. 1988-89 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS